## 141. என்னோடிருக்கும் தேவன் யார்

### பல்லவி

என்னோடிருக்கும் தேவன் யார் என்பதை
நான் அறிந்து கொண்டேன் - (2)

### அனுபல்லவி

அவர் சர்வ வல்லவர்
சாவாமை உள்ளவர்

### சரணங்கள்

1. தேவனாகிய கர்த்தர் பெரியவரே
மகிமையும் பராக்கிரமும் உடையரே
ஒளியை வஸ்திரமாய் தரித்தவரே
வானங்களை திரையைபோல் விரித்தவரே
- என்னோடிருக்கும்

2. மேகங்களை தம் இரதமாக்கி
காற்றின் செட்டைகளில் செல்கிறீர்
மின்னல்களை தம் உள்ளங்கையில்
வைத்திருக்கும் தேவன் நீரே
- என்னோடிருக்கும்

3. கடலின் அலைகளின் எல்லைகளை
குறித்து வைத்தவர் நீரே
அதற்கு கதவுகளை தாழ்பாள்களை
போட்டு வைத்தவர் நீரே
- என்னோடிருக்கும்